**<u>மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.</u>**

**<u>அசல் வழக்கு எண்.131/2021</u>**

முன்னிலை – பா.சரவணன், பி.எஸ்ஸி.பி.எல்.,
மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி.

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 05 ஆம் நாள் வியாழக்கிழமை பிரதிவாதி தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.அமுதா, மொழிபெயர்ப்பாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மாரியப்பன் | தந்தை பெயர் | : | செல்லன் |
| ஜாதி | : | | கிராமம் | : | |
| வட்டம் | : | | மதம் | : | |
| தொழில் | : | | வயது | : | |

நாள் : 05.02.2026

**D.W. : 1**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

என் தாயார் பெரியம்மாள் இறக்கும் போது அவருக்கு 80 வயது. என் தாயாருக்கு திடீரென உடல் நிலை சரியில்லாமல் போனது. என்ன

உடல் நிலை பாதிப்பு என்றால் மன உளைச்சல் ஏற்பட்டது. இதற்கு எந்த மருத்துவமனையில் காட்டினோம் என்றால் சிறுகனூர் எஸ்.ஆர்.எம். மருத்துவமனையில் காட்டினோம். அதற்கு முன்பு பாண்டிச்சேரியில் ஜிப்மர் மருத்துவமனையில் காட்டினோம். அங்கு என் தாயாருக்கு கழுத்தில் இருந்த கொப்பளத்திற்கு சிகிச்சை செய்தார்கள். அங்கு வருடத்திற்கு ஒருமுறை காட்ட போக வேண்டும். இடையில் ஒரு முறை என் தாயார் அங்கு போகவில்லை. இரண்டு ஆண்டுகள் பாண்டிச்சேரிக்கு மறுபரிசோதனைக்கு என் தாயார் போகவில்லை. அதன் பிறகு சிறுகனூர் எஸ்.ஆர்.எம். மருத்துவமனையில் என் தாயாரை காட்டினோம். சிறுகனூர் எஸ்.ஆர்.எம். மருத்துவமனைக்கு எத்தனை முறை கூட்டினோம் என்றால் 3 அல்லது 4 முறை சென்றோம். என் தாயார் வீட்டில் தான் இறந்தார். என் தாயாரை மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு கூட்டிச் செல்ல சொன்னார்கள், அதன் பிறகு வீட்டில் வந்த பிறகு இறந்து விட்டார். என் தாயார் சிறுகனூர் எஸ்.ஆர்.எம். மருத்துவமனையில் எவ்வளவு காலம் உள்நோயாளியாக இருந்தார் என்றால் சுமார் 1 மாத காலம் இருந்தார். அது தொடர்பான மருத்துவ ஆவணங்கள் என் கைவசம் இல்லை. ஜிப்மர் மருத்துவமனையில் என் தாயாருக்கு கழுத்துப் பகுதியில் நடந்த அறுவைசிகிச்சை அவர் இறப்பதற்கு சுமார் 5 ஆண்டுகள் முன்பு நடந்தது. என் சகோதரி கடைசியாக எஸ்.ஆர்.எம் மருத்துவமனையில் என் தாயார் இருக்கும் போது வந்து பார்த்தார். நான் தான் என் தாயாரை முழுக்க முழுக்க பார்த்துக் கொண்டேன். நான் சொல்வது தவறு என்றும், என் சகோதரியான வாதி தான் என் தாயாரை முழுக்க முழுக்க பார்த்துக்

கொண்டார் என்றால் சரியல்ல. என் தாயார் 5 அல்லது 6 ஆம் வகுப்பு வரை படித்துள்ளார். என் தாயார் பாப்பாப்பட்டியில் உள்ள பள்ளியில் படித்தார். எனது முதல் விசாரணை பத்தி 4 இல் வாதியின் திருமணத்தின் போது 20 பவுன் நகை போட்டதாகவும், வாதியின் கணவர் ஜவுளி கடை நடத்தி நஷ்டம் ஏற்பட்டதாகவும், அதற்கு ரூ.6 இலட்சம் கடன் கொடுத்ததாகவும் கூறியுள்ள விவரங்கள் பொய்யானவை என்றால் சரியல்ல. மேலும் வாதியின் மகன் திருமணத்திற்கு 3 பவுன் சீர்வரிசையாக நான் கொடுத்ததாகவும், எனது தாயார் இறந்த பிறகு என் தாயார் வைத்திருந்த 6 பவுன் நகைகளை வாதி கொடுத்துள்ளேன் நான் கூறியுள்ள விவரங்கள் பொய்யானவை என்றால் சரியல்ல. மேற்படி விவரங்களை நான் எதிர் வழக்குரையில் சொல்லியுள்ளேன். அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. வாதி தனிப்பட்ட முறையில் ஒரு மனையை வாங்கி வீடு கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. என் தாயார் 2 மனை வாங்கினார். இரண்டு மனைகளும் என் தாயார் பெயரில் வாங்கப்பட்டதா என்றால் ஒரு மனை என் தாயார் பெயரிலும், ஒரு மனை என் சகோதரியான வாதி பெயரிலும் வாங்கப்பட்டது. அந்த ஆவணங்களை வழக்கிற்கு பிறகாவது படித்து பார்த்தேனா என்றால், என் தாயார் சொன்ன விவரங்கள் தான். அந்த ஆவணங்களை வாதி எடுத்துச் சென்றுவிட்டார். வாதி இரண்டு மனைக்குள்ள பத்திரங்களையும் எடுத்துச் சென்றுவிட்டார். அந்த விவரத்தை எதிர் வழக்குரையில் சொல்லியுள்ளேன். ஆவணத்தை நகல் போட்டு வாங்கியுள்ளேன். பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் வாதி பெயரில்

வாங்கப்பட்ட சொத்து என் தாயார் பணம் கொடுத்து வாங்கப்பட்டதாக வாசகம் உள்ளதா என்றால் இல்லை. ஆனால் என் தாயார் தான் பணம் கொடுத்தார். தாவா 2 அயிட்ட சொத்துக்களும் எனக்கு சொந்தம் என்று கூறுகிறேன். எந்த அடிப்படையில் கூறுகிறேன் என்றால் என் தாயார் இரண்டு உயில் எழுதி வைத்துள்ளார். அதன் அடிப்படையில் கூறுகிறேன். முதலில் வாங்கப்பட்ட சொத்திற்கு என் தாயார் முன்பே ஒரு உயில் எழுதி வைத்துள்ளார். பின்னால் வாங்கப்பட்ட சொத்திற்கு பின்னிட்டு உடல் நிலை சரியில்லாமல் போன போது என் தாயார் இரண்டாவது உயில் எழுதி வைத்தார். முதல் உயில் பதிவு செய்யப்பட்ட உயிலாகும். இரண்டாவது உயில் பதிவு செய்யப்படாத உயிலாகும். அதை பதிவு செய்யாததற்கு காரணம் அப்போது நடமாட்டம் இல்லாதிருந்தார். நடமாட்டம் இல்லாததால் இரண்டாவது உயிலை பதிவு செய்ய முடியவில்லை என்று வாசகம் எழுதி உள்ளாரா என்றால் இல்லை. என் தாயார் நடமாட்டம் இல்லாமல் சுமார் 1 ஆண்டு வரை இருந்தார். அதற்கு முன்பு நல்ல நடமாட்டத்துடன் இருந்தார். இரண்டாவது உயிலை எனக்கு தெரிந்த பத்திர எழுத்தர் எங்கள் வீட்டிற்கே வந்து எழுதி கொடுத்தார். பத்திரம் எழுதியவர் தான் தான் அதை எழுதியதாக அந்த உயிலில் கையெழுத்து போட்டாரா என்றால் இல்லை. சாட்சிகள் தான் கையொப்பம் செய்தார். பத்திர எழுத்தர் எங்கள் வீட்டிற்கே வந்தார். எங்கள் வீடு மாரியாயி நகர், காலேஜ் ரோடு என்ற முகவரியில் உள்ளது. முசிறியில் சார்பதிவாளர் அலுவலகம் உள்ளது என்றால் சரிதான். எங்கள் வீட்டிலிருந்து சார்பதிவாளர் அலவலகத்திற்கு 10 நிமிடத்தில் போய்விடலாம் என்றால் சரிதான். இரண்டாவது வாதியை

அழைத்து சாட்சி போடுமாறு கேட்கவில்லை. வாதிக்கு இரண்டாவது உயில் எழுதியது தெரியாது என்றால் சரியல்ல. வாதி எப்போதும் எங்கள் வீட்டிற்கு வந்து எங்கள் வீட்டிலேயே தான் இருப்பார். அப்போது அங்கு பேசி கொள்வதை வைத்து வாதிக்கு இரண்டாவது உயில் பற்றி தெரியும். நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ஆவணத்தை தவிர என் தாயாரின் கையொப்பம் அடங்கிய வேறு ஆவணம் என் கைவசம் இல்லை. பி.வா.சா.ஆ.4 பதிவு செய்யப்படாத உயிலில் கண்ட கையொப்பம் என் தாயாருடையதே இல்லை என்றால் சரியல்ல. என் தாயார் உயில் எழுதும் போதே படுக்கையாகிவிட்டார். அப்போது அவருக்கு நடை உடை கிடையாது. இரண்டாவது உயில் எழுதி சுமார் 1 1/2 மாதத்தில் என் தாயார் இறந்து விட்டார். இரண்டாவது உயில் எழுதியதாக சொல்லும் சமயத்தில் அதில் கண்ட சொத்தின் அசல் கிரைய பத்திரம் எங்கள் கைவசம் இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 முதல் உயிலும் என் தாயார் எழுதி வைத்த உயில் அல்ல என்றும், அதில் உள்ள கையொப்பம் என் தாயாருடையது அல்ல என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3–ஐ என் தாயாருக்கு தெரியாமல் ஆள்மாறாட்டம் செய்து தயார் செய்தேன் என்றால் சரியல்ல. என் சகோதரியான வாதிக்கு சொத்து கொடுக்க கூடாது என்ற எண்ணத்தில் பி.வா.சா.ஆ.3,4 உயில்களை பொய்யாக தயார் செய்தேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 உயில் எழுதியதாக சொல்லும் சமயத்தில் நான் என் தாயார் அருகில் இல்லை. ஆனால் உயில் எழுதுவதாக என் தாயார் சொல்லி எனக்கு தெரியும். வாதி எங்கள் வீட்டிற்கு வந்து

ஆவணங்களை எடுத்து சென்று விட்டார் என்று வழக்கறிஞர் அறிவிப்போ, புகாரோ கொடுத்தேனா என்றால் இல்லை. அக்கா என்பதால் கொடுக்கவில்லை. எதிர் வழக்குரையில் என் அம்மா இறந்த பிறகு வாதி அசல் ஆவணங்களை எங்கள் வீட்டிற்கு வந்து எடுத்து சென்று விட்டதாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணை பத்தி–5 இல் வாதியின் மகன் அருண் திருமணத்திற்கு என் தாயாரின் 5 பவுன் நகையை விற்று ரூ. 1 இலட்சத்து 80 ஆயிரம் செலவு செய்ததாகவும், அதற்காக 1வது அயிட்ட சொத்தை என் தாயார் என்னையே எடுத்துக் கொள்ள சொன்னதாகவும் சொன்னால் சரியல்ல. கனகாம்பாள் வீடு கட்ட என் தாயார் போஸ்ட் ஆபிஸில் வைத்திருந்த ரூ.1 இலட்சம், இந்தியன் வங்கியில் வைத்திருந்த ரூ.1 இலட்சம், கையில் வைத்திருந்த ரூ.7 இலட்சம் ஆக மொத்தம் ரூ.9 இலட்சத்தை கொடுத்து தாவா 1வது அயிட்ட சொத்தை ஒட்டியுள்ள என் தாயார் வாதிக்கு வாங்கி கொடுத்த இடத்தில் 2012 இல் என் தாயார் வீடு கட்டிக் கொடுத்ததாக கூறியுள்ளது பொய் என்றால் சரியல்ல. நான் இருசக்கர வாகனம் பழுதுபார்க்கும் கடையை வாடகை இடத்தில் வைத்துள்ளேன். என் தாயார் வீட்டுக் குடித்தனம் தான். என் தந்தை செல்ல முத்து ராஜா எவ்வளவு தொகை கொடுத்தார் என்றால், எனக்கு சிறு வயது என்பதால் அந்த விவரம் தெரியாது. என் தந்தை சொத்து கொடுத்தாரா என்றால் ஒரு காலி இடம் உள்ளது. அது என் பெயரில் தான் உள்ளது. அதற்கு பத்திரம் இல்லை. என் பெயரில் பட்டா உள்ளது. மருதநாட்டார் என் தாயாருக்கு இடம் எதுவும் வாங்கி கொடுக்கவில்லை. மருதநாட்டார் என் தாயாருக்கு பணம் கொடுத்தாரா என்றால் அது என் தாயாருக்கு தான் தெரியும். வாதி அவருக்கு

திருமணமான பிறகு அவரது உழைப்பு மற்றும் கணவரது உழைப்பை கொண்டு அவரது பெயரில் வாங்கிய இடத்தில் அவரது தொகையை வைத்து வீடு கட்டினார் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 மற்றும் 4 உயில்கள் என் தாயார் எழுதி வைத்தது அல்ல என்றால் சரியல்ல. அவை வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி.
திருச்சிராப்பள்ளி.